JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-7 Witness
for Prosecution

CC.No. 38/2024 Crime No. 132/20224 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-7-ஞானபாலன் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 17th day of November 2025 | | | |

**எதிரிகள் ஆஜர் இல்லை**

**முதல் விசாரணை**

நான் பவானி, ராணா நகரில் குடியிருந்து கொண்டு டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறேன். கடந்த 13/03/2024-ம் தேதியன்று நான் எனது சொந்த வேலையாக பவானி காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். அப்போது காவல் நிலையத்தில் போலீசார் செயின் திருட்டு போனது தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த செயினை தற்போது பிடித்து விட்டதாகவும், அதற்காக சாட்சி கையொப்பம் செய்யும்படி கூறினார்கள். அதன்படி நான் நான்கு கையொப்பங்கள் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி அமரன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அமரனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி நிஜார் அலி என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **எதிரி நிஜார் அலியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் காவல் நிலையத்தில் போலீசார் ஒரு செயினை என்னிடம் காண்பித்தார்கள். அதற்காக ஒரு கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் செயினை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பைக்கை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.17 07:15:56 +0530

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 13/03/2024 ஆம் தேதியன்று காலை சுமார் 08.00 மணியளவில் சிங்கம்பேட்டை செல்வதற்காக பவானி காவல் நிலையம் அருகில் நானும், எனது நண்பர் கார்த்திகேயன் என்பவரும் சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது போலீசார் இரண்டு நபர்களை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்ததாகவும், அருகில் சென்று பார்த்தபோது அதில் ஒருவர் பெயர் அமரன் என்றும் மற்றொருவர் நிஜார் அலி என்று கூறியதாகவும், பின்னர் ராண நகரில் ஒரு பெண்மணியிடம் இருந்து செயினை பறித்துச் சென்ற குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும், எதிரிகளை போலீசார் எங்கள் முன்னிலையில் கைதுக்கான காரணம் கூறி கைது செய்ததாகவும், எதிரிகள் இருவரும் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், எதிரிகள் இருவரும் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், பின்னர் 1ம் எதிரி அமரன் அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர்கள் ஓட்டி வந்த பைக்கை எடுத்து போலீசாரிடம் ஆஜர் செய்ததாகவும், அதை போலீசார் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகசரில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், பின்னர் 2ம் எதிரி நிஜார் அலி அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியவாறு அவர் அழைத்துச் சென்ற எடப்பாடி நெசவாளர் காலனியில் உள்ள அருண்குமார் என்பவரின் வீட்டில் இருந்து தங்கச்செயின் ஒன்றினை நிஜார் அலி எடுத்து போலீசாரிடம் ஆஜர் செய்ததாகவும், அந்த தங்க செயினை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.17 07:16:07 +0530

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.